# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனம் (நீக்கல்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2007, யூலை மாதம் 13 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனம் (நீக்கல்) சட்டம்

[*2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ— 41/2005*

**இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் பணிகளைக் கையேற்கும் நோக்கத்திற்காக கூட்டிணைக்கப்பட்ட பகிரங்க கம்பெனி ஒன்றினால் பணிகள் கையேற்கப்படுவதற்கும், 1966 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, ஹோட்டல்கள் கூட்டுத்தாபனச் சட்டத்தை நீக்குவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

*சுருக்கப் பெயர் மற்றும் நடைமுறைக்கு வரும் தேதி.*

***1.*** *(1) இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபன (நீக்கல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையினால் எத்தேதியை நியமிக்கலாமோ (இதனகத்துப்பின்னர் அது "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தேதியானது 1966 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனச் சட்டத்தின் நீக்குகை, எத்தேதியிலிருந்து பயனுறுதல் வேண்டுமோ அத்தேதியாதல் வேண்டும்.*

*(2) இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனச் சட்டத்தின் நீக்குகை எவ்வாறாயினும் அமைச்சரானவர் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன், பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்டவாறாக இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் பணிகளை கையேற்பதற்கு என கம்பெனியொன்றினைக் கூட்டிணைக்குமாறு 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை பகிரங்கக் கம்பெனிகளாக மாற்றுவதற்கான சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கம்பெனிகள் பதிவாளரைப் பணித்தல் வேண்டும். அத்தகைய பணிப்புரையைப் பின்பற்றிக் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியானது, "வரையறுக்கப்பட்ட இலங்கைக் ஹோட்டல்கள் கூட்டுத்தாபனம்" எனப் பெயர் குறிக்கப்படல் வேண்டும். 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை பகிரங்கக்*

கம்பெனிகளாக மாற்றுவதற்கான சட்டத்தின் ஏற்பாடுகள் வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாப னத்திற்கும் அதன் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளைப் பகிரங்க கம்பெனிகளாக மாற்றுவதற்கான சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் நியமிக்கப்பட்ட தேதிக்கு உடன் முன்னரான நாளன்று இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்பட்ட சாதாரண பங்குகள் மற்றும் முந்துரிமைப் பங்குகளின் உரித்தாக்கலுக்கு ஏற்புடையனவாகாது என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய தேதியில் ஏற்புடைத்தான சாதாரண மற்றும் முந்துரிமை பங்குக் கூட்டமைப்பு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் பங்குக் கட்டமைப் பிற்கு தொடர்ந்தும் ஏற்புடையதாதல் வேண்டும்.

ஆயின் மேலும், —

(அ) நியமிக்கப்பட்ட தேதிக்கு உடன் முன்னரான தேதியிலிருந்து இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் பங்குதாரர்கள் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் பங்குதாரர்களாக தொடர்ந்திருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) நியமிக்கப்பட்ட தேதிக்கு உடன்முன்னரான தேதியில் இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் பணிப் பாளர்களாக பதவி வகிப்போர், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர்களாக கருதப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் எழுத்திலான சட்டம், அறிவித்தல், அறிவிப்பு அல்லது வேறேதேனும் ஆவணத்திலுள்ள "இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனம்", " இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாப னத்தின் பங்குதாரர்கள் " மற்றும் "இலங்கை ஹோட்டல்கள்

*கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள்" பற்றிய ஒவ்வோர் குறிப்பீடும் முறையே, "வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனம்", "வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் பங்குதாரர்கள்" மற்றும் "வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள்" என வாசிக்கப்பட்டு பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.*

*(4) (அ) நியமிக்கப்பட்ட தேதிக்கு உடன் முன்னரான நாளன்று பதவிவகித்த இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும், நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்திய நாளில் அவர்களால் துய்க்கப்பட்ட அனுகூலங்களுக்கு குறைந்ததாகவிராத நியதி நிபந்தனைகள்மீது வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தில் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக தொழில் முனையப்படுதல் வேண்டும்.*

*(ஆ) இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் ஊழியரொருவரால் வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் தொழிலைக் கையேற்றலானது, 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் நோக்கங்களுக்காக, இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தினால் அத்தகைய ஊழியரின் சேவை முடிவுறுத்தலொன்றாகக் கருதப்படுதலாகாது.*

*(இ) வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விலக விரும்புகின்ற (அ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவர், வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தில் சேவை செய்யக் கிடைக்கக்கூடிய முனைவு பற்றிய அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள், அவ்வாறு செய்யலாம். ஓர் அலுவலர் அல்லது சேவையாளர் முனைவை ஏற்காத விருப்பத்தெரிவை பிரயோகிப்பாராயின், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அது தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள தன்னிச்சையான ஓய்வுத் திட்டமொன்றின்கீழ் அவருக்கு நட்டவீடு செலுத்தப்படுதல் வேண்டும்.*

(ஈ) ஊழியர் சகாய நிதியத்தின் உறுப்பினரொருவராக இருக்கையில் (இ) எனும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட தன்னிச்சையாக ஓய்வுபெறும் திட்டத்தின்கீழ் ஓய்வுபெறுகின்ற அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவருக்கு, 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாயநிதிய சட்டத்தின் 23 ஆம் பிரிவின் (i) ஆம் உட்பிரிவின் (ஊ) எனும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அத்தகைய தன்னிச்சையாக ஓய்வுபெறும் திட்டத்தின்கீழ் நட்டஈடுபெற்று அத்தகைய ஊழியர் அல்லது சேவையாளர் ஓய்வுபெற்றதன் பின்னர் சாத்தியப்படக் கூடியவாறான விரைவில் அத்தகைய அலுவலரின் அல்லது சேவையாளரின் தனிப்பட்ட கணக்கில் வரவிலிருக்கும் மொத்தத் தொகை செலுத்தப்படுதல் வேண்டும்.

(5) திறைசேரிச் செயலாளர், அமைச்சரவையின் முன்னங்கீகாரத்துடன் எஞ்சியுள்ள முந்துரிமைப் பங்குகளை இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் சாதாரண பங்குகளாக மாற்றிய பின்னர் அல்லது அத்தகைய பங்குகள் மீதான ஏதேனும் உரிமைகளை, அவற்றில், நியமிக்கப்பட்ட தேதிக்கு உடன் முன்னரான நாளன்று தொழிலுக்கமர்த்தப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் ஊழியரிடையே அமைச்சரால் பணிக்கப்படும் முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டி பத்து சதவீத பங்குகள் நீங்கலாகக் கையுதிர்க்கலாம் என்பதுடன் அத்தகைய பங்குகள் அத்தகைய ஊழியர்களின் பெயரில் ஊழியர் சகாய நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(6) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் அமைப்பு அகவிதியும், புறவிதியும் வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை ஊழியர்கள் நம்பிக்கை நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் உறுப்பினரொருவரை உள்ளடக்குதல் வேண்டும் எனும் பயனுடைய ஏற்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

காப்பு.

***2.*** *(1)* நியமிக்கப்பட்ட தேதிக்கு உடன்முன்னரான நாளன்று உள்ளதான இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபனத்தின் எல்லா ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் மற்றும் வேறு சாதனங்களும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தினால் செய்துகொள்ளப்பட்ட, வியடத்திற்கேற்ப, ஒப்பந்தங்களாகவும், உடன்படிக்கைகளாகவும் மற்றும் வேறு சாதனங்களாகவும் கருதப்படுதல் வேண்டும்.

*(2)* இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தால் அல்லது அதற்கு எதிராகத் தொடரப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு உடன் முந்திய நாளன்று முடிவுறாதிருப்பவையுமான எல்லா துடர்ச்சிகளும் வழக்குகளும் மற்றும் வேறு சட்ட நடவடிக்கைகளும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து, விடயத்திற்கேற்ப, வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தால் அல்லது அதற்கெதிராகத் தொடரப்பட்ட துடர்ச்சிகள் வழக்குகள் மற்றும் நடவடிக்கைகள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

*(3)* நியமிக்கப்பட்ட இத்தேதிக்கு உடன்முன்னரான நாளன்று உளதான இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் எல்லா உரிமைகளும் பொறுப்புகளும் மற்றும் கடப்பாடுகளும் வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் விடயத்திற்கேற்ப உரிமைகளாகவும், பொறுப்புகளாகவும் மற்றும் கடப்பாடுகளாகவும் கருதப்படுதல் வேண்டும்.

*(4)* ஏதேனும் நீதிமன்றில் ஏதேனும் வழக்கு அல்லது நடவடிக்கையில் இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்திற்கு சாதகமாக அல்லது அதற்கெதிராக பதியப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு உடன்முன்னரான நாளன்று திருப்திப்படுத்தப்படாது இருக்கும் ஒவ்வொரு தீர்வை, கட்டளை அல்லது தீர்ப்பும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து விடயத்திற்கேற்ப, வரையறுக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்திற்கு சாதகமாக அல்லது அதற்கெதிராக பதியப்பட்ட தீர்வை, கட்டளை அல்லது தீர்ப்பாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க வலுவுக்கிடவும்படலாம்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏனும், ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள் கோடல்.*

**4**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

"இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனம்" என்பது, 1966 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனம் எனப் பொருள்படும் ;

"ஊழியர் சகாயநிதியம்" என்பது, 1958 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியம் எனப் பொருள்படும் ;

"ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்" என்பது 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் எனப் பொருள்படும் ;

"பகிரங்கக் கம்பெனி" என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட பகிரங்க கம்பெனியொன்று எனப் பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்